**முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்**

**O.S.No. 75/2021**

PW1- சீதா நாள் 06.11.2024

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் ஏற்கனவே சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.69/2020 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தேன். எனது அம்மா பெரம்பலூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.140/2017 தாக்கல் செய்து எனது அம்மா இறந்தபிறகு எனது அண்ணன் அந்த வழக்கை நடத்தி வருகிறார். அந்த வழக்கு சொத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை. குடும்ப சொத்து என்று தான் நான் வழக்கு போட்டுள்ளேன். நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு 13 ஆண்டுகளுக்கு முனபே என் அம்மா இந்த வழக்கு சொத்துக்களை என் அண்ணனுக்கு தானமாக எழுதிக்கொடுத்துவிட்டார் என்று அதனால் நான் தற்போது வழக்கு போடமுடியாது என்று சொன்னால் சரியல்ல. தாவா 2 வது அயிட்டத்திலுள்ள வீடு என் அம்மா எல்லோரும் சேர்ந்து தான் கட்டினோம். என் அண்ணன் 4ம் பிரதிவாதி வங்கியில் கடன் வாங்கியிருந்தார் என்பது வழக்கிற்கு பிறகு தெரியும். ஆனால் அது வீடு கட்டுவதற்காகவா என்று எனக்கு தெரியாது. நான் 2வது அயிட்டத்தில் விஸ்தீரணத்தை தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 84 சதுர மீட்டரில் 2844 சதுரடி வீடு உள்ளதாக தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என் அண்ணன் தான் கெட்டிமெத்தை வீடு கட்டினார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.